# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**ஒப்பந்த அடையாள இல.: TRC/ADM/01/24/04/33**

## ஓர் ஆண்டு காலத்திற்காக வளிச் சீராக்கிகளின் சீரமைப்பு, பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல் (2026-2027)

வளிச்சீராக்கிகளின் சீரமைப்பு, பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தலுக்காக கொழும்பு 08, எல்விட்டிகல மாவத்தை, 276, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) திணைக்கள பெறுகைக் குழு (சிறிய அளவானது) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் நிலையங்களில் சேவைகள் வழங்கப்படுதல் வேண்டும்

**a) 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 இல் தலைமை அலுவலகம்**

**b) கதிரானவில் அதிர்வெண் கண்காணிப்பு நிலையம்**

**c) ஹந்தானவில் அதிர்வெண் கண்காணிப்பு நிலையம்**

**d) கொக்காவில் பல்நோக்கு தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்பு கோபுரம்**

**e) மடுகந்த தொலைத்தொடர்பு கோபுரம்**

மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணமாக 2,000.00 ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்தி 2026.01.14 ஆம் திகதி தொடக்கம் 2026.01.23 ஆம் திகதி வரை பணிப்பாளருக்கு (நிர்வாகம் மற்றும் கூட்டுறவு அலுவலகங்கள்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து தகுதி பெற்ற நிறுவனங்களினால் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட பதினையாயிரம் இலங்கை ரூபாவின் (இல. ரூபா 15,000.00) ‘‘விலைமனுப் பிணை’’ ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட வடிவத்தில் இருத்தல் வேண்டும்.

முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘ஓர் ஆண்டு காலத்திற்காக வளிச் சீராக்கிகளின் சீரமைப்பு, பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தல் (2026-2027)’’ என்று குறிப்பிட்டு 2026.01.26 ஆம் திகதி பி.ப. 02.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (சிறிய அளவானது), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக பிரிவில் இருந்து **0112669789** ஊடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

**2026.01.13**

**தலைவர்**

**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய அளவானது)**

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL)**

**276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.**